மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முயற்சி என்பது பச்சை மட்டையை பற்ற வைக்கின்ற முயற்சி. அது பலிக்காது என்பதைச் சொல்லி நன்றி கூறி விடைபெறுகிறேன்.

6. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை பேரவையின் ஒன்பதாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்கள் (Panel of Chairmen) ஆக நியமிக்கின்றேன்.

1) திரு. அ. பாப்பா சுந்தரம்

2) திரு. ஓ.கே. சின்னராஜ்

3) திரு. கே.பி. அன்பழகன்

4) திரு. ஆர். சின்னசாமி

5) திரு. பி.ஜி. நாராயணன்

6) முனைவர் செ.கு. தமிழரசன்

7. இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கை, 2014–2015, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014-2015 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின் முன்வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகள், மொத்தம் 1,751.18 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன.

@ 148 முதல் 151 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் நாளன்று 2014-2015 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் "புதுப் பணிகள்" மற்றும் "புது துணைப் பணிகள்" குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.

பிற நிதி உதவிகளுடன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு தேவைப்படும் நடைமுறை மூலதனத்திற்கு வழிவகை முன்பணமாக அரசு 1,000 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் நிதி உதவியுடன் 210 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள், குடிநீர் வசதி மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் முதலான வசதிகள் வழங்குவதற்காக அரசு 247.75 கோடி ரூபாய்க்கு நிருவாக அனுமதி அளித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ஒவ்வொரு இனத்தின் கீழும் ரூபாய் 1,000/- "மானியக் கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் உள்ள புதிய அரசு பல்தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசு 28.51 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் ரூபாய் 1,000/- "மானியக் கோரிக்கை எண் 20-உயர் கல்வித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

இம்மாமன்றத்தில் உறுதி அளித்தவாறு, நீதிமன்ற தீர்ப்பின்படி பிணை வைக்கப்பட்டுள்ள 544 வாகனங்களை விடுவிக்க, ஆறு மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு வழிவகை முன்பணமாக அரசு 39.73 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது.

இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

அங்கன்வாடி மையம் ஒன்றிற்கு ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பில், 5,565 அங்கன்வாடி மையங்களை மாதிரி அங்கன்வாடி மையங்களாக மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு 55.65 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 45-சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 2-10

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் சென்னை மாநகரின் நான்கு வடிநிலங்களில் உள்ள பெரிய வடிகால்களை மேம்படுத்துவதற்கு அரசு கூடுதலாக 66.83 கோடி ரூபாய் ஒப்பளித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/- மானியக் கோரிக்கை எண் 40—பாசனம் (பொதுப் பணித் துறை) என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

நீலகிரி மாவட்ட தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக உள்ள சிறு தேயிலை விவசாயிகளுக்கு ஆதரவு விலை வழங்குவதற்காக 12 கோடி ரூபாய் அளவில் விலை கட்டுப்பாட்டு நிதியை அரசு உருவாக்கியுள்ளது. இந்நிதிக்கு, அரசின் பங்களிப்பு 8 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் மானியக் கோரிக்கை எண் 44—குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

சென்னை, அரசு மைய அச்சகத்தில் தீ விபத்தில் முழுவதும் சேதமுற்ற கட்டடத்திற்கு பதிலாக புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு 21.59 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/- மானியக் கோரிக்கை எண் 30—எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

2014-2015 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை எண்	பணிகளும் நோக்கங்களும்	(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	1	..	..
3	நீதி நிருவாகம்	2	..	..
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	1	..	..
5	வேளாண்மைத் துறை	15	3	..
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	12	..	..
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	21,42,05	2	..
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறை)	2	..	32,93,00
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	6	..	..
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	1	..	..

13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	1	1	..
14	எரிசக்தித் துறை	..	..	1,000,00,00
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	2	..	..
16	நிதித் துறை	1	..	..
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	1	..	..
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	22,23	2	..
20	உயர் கல்வித் துறை	4	4	..
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	90,01	13,09	..
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	11	1	..
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1	..	..
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்— நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	2	..	..

26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	1	..	1
27	தொழில் துறை	2	1	..
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	5	..	..
29	சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	12,03	1	..
30	எழுதுபொருள் மற்றும் அச்சு-(தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	1	2,50,01	..
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	1	..	..
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	3	2	..
33	சட்டத் துறை	1	..	..
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	333,96,39	172,87,69	..
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	1	..	..

36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	2	4	..
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1	..	..
38	பொதுத் துறை	8	..	..
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	..	10	..
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	3	20	..
41	வருவாய்த் துறை	10,14	1	..
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	1	..	..
43	பள்ளிக் கல்வித் துறை	7	3	..
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	8,00,02	..	..
45	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	45,33,68	12,81,80	..
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	1	..	..
48	போக்குவரத்துத் துறை	..	..	3973,00
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	11	..	..
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	75,76	..	..
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	69,09,22	..	..
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	24,02	..	..
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	1	5,00,01	..
	பெருமொத்தம்	480,16,68	193,33,15	1,072,66,01